INTERNATIONAL ASSOCIATION OF TAMIL JOURNALISTS
சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்
93, Elm walk, Raynes Park, London SW20 9EF
Reg. No: 06470424

லண்டன் 31.05.2018

# ஊடகவியலாளர் தாக்குதலுக்கு கண்டனம்

காகைக்கதிர் பத்திரிகையின் செய்தியாளரும், விநியோகத்தருமாகிய செல்வராசா இராசேந்திரன் மீது கடந்த திங்களன்று நடாத்தப்பட்ட தாக்குதல், ஊடக சுதந்திரத்திற்கு இலங்கையில் தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதை தெளிவாக காட்டுவதாக சர்வதேச தமிழ் ஊடகவியாலாளர் ஒன்றியம் கருதுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்லாது, எதிர்காலத்தில் இதுபோன்று நடைபெறாது தடுப்பதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துகின்றோம்.

கடந்த ஆட்சியாளர் காலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கெதிரான வன்முறைகள், படுகொலைகள், காணமல் ஆக்கப்பட்டமை போன்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவுமில்லை, பதிலுமில்லை.

இதுவரை கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடக-வியலாளர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்பதோடு அனைத்துலக மட்டத்தில் அழுத்தங்களை பிரயோகிக்க தொடர்ந்தும் பாடுபடுவோம்.

இவ்வண்ணம்,

திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம்
தலைவர்